# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2240/23 - 2021 අගෝස්තු මස 11 වැනි බදාදා - 2021.08.11
*2240/23 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 11 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

39 அ (1) ஆம் பிரிவின் கீழ் கட்டளை

2014 ஆம் ஆண்டின் நவெம்பர் மாதம் 07 ஆந் திகதிய 1887/43 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) பிரசுரிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டின் 318 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப் பட்டுள்ளன. அரசின் சார்பில் அச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ், இக் காணித்துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன எனினும் பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளின் இருப்பாட்சி இலங்கைச் சனநாயக சோசலிசக் கடியரசு சார்பில் இன்றும் பொறுப்பேட்கப் படவில்லை. எனவே அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் காணி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், குறித்த காணித்துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டுகளை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

எஸ். எம். சந்திரசேன.
காணி அமைச்சர்,

எனது இல. : 4-3/6/2014/HW/10.
பிரதேச செயலாளர் இல. : කැප්‍රාලේ /8/1/3.
காணி அமைச்சு, "மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2021, ஓகத்து 06.

#### அட்டவணை

மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில், 582 பி, பெலன்வத்தை கிழக்கு கிராம அலுவலர் பிரிவில், பெலன்வத்தை கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2020.07.10 ஆந்



இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

திகதிய CO/DSO/2020/136 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக குறிப்பிடப்பட்ட பின்வரும் பெயர்கள் விஸ்தீரணங்களைக் கொண்ட காணித்துண்டுகளின் எல்லைகள்:

**1. துண்டு B - தெல்கஹகனத்த - விஸ்தீரணம் : சுமார் 0.0013 ஹெக்டயார்**

வடக்கு : கொ 9543 ஆரம்ப வரைபடத்தின் துண்டு இல. 37, இந்த வரைபடத்தின் துண்டுகள் A மற்றும் C ; கிழக்கு : இந்த வரைபடத்தின் துண்டுகள் A, C மற்றும் D ; தெற்கு : ஜே. பி. ஏ. ஜயசேக்கர மற்றும் ரீ. பி. ஏ. ஜயசேக்கர உரிமை கோரும் தெல்கஹகனத்த காணி ; மேற்கு : ரீ. பி. ஏ. ஜயசேக்கர மற்றும் அரோஷி பெரேரா உரிமை கோரும் தெல்கஹகனத்த காணி.

**2. துண்டு D - தெல்கஹகனத்த - விஸ்தீரணம் : சுமார் 0.0009 ஹெக்டயார்**

வடக்கு : இந்த வரைபடத்தின் துண்டு C ; கிழக்கு : இந்த வரைபடத்தின் துண்டு C ; தெற்கு : ஜே. பி. ஏ. ஜயசேக்கர உரிமை கோரும் தெல்கஹகனத்த காணி ; மேற்கு : ஜே. பி. ஏ. ஜயசேக்கர மற்றும் ரீ. பி. ஏ. ஜயசேக்கர உரிமை கோரும் தெல்கஹகனத்த காணிகள், இந்த வரைபடத்தின் துண்டுகள் B மற்றும் A.

08 - 391

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.